# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2164/54 - 2020 පෙබරවාරි මස 27 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.02.27

*2164/54 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/ 1978* (X) (அ).

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும்* PB *4833 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான நஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் மனேஜ்மன்ட் லிமிட்டெட் தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆந் திகதிய 2156/ 10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான* II *ஆம் அட்டவணையை, அதற்கான நிரல்* I *இலும் மற்றும் நிரல்* II *இலுள்ள அதன் நேரொத்த பதிவிலும் காணப்படுகின்ற "எந்திர மின்னணுவியல் பொறியியல் சிறப்பு விஞ்ஞான பொறியியல் இளமாணி என்னும் பதிவை உடனடுத்து இதற்கான அட்டவணை* I *இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய இதற்கான அட்டவணை* II *இல் முறையே நிரல்* I *இன் கீழும் மற்றும் நிரல்* II *இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.*

*கலாநிதி பந்துல குணவர்த்தன,*
*உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர்.*

கொழும்பு,
*2020, பெப்புருவரி 24.*


1A - PG 4903 — 517 (2020/02)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை I**

*நிபந்தனைகள்*

1. நஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் மனேஜ்மன்ட் லிமிடெட் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டம் தொடர்பான பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கான மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது, சுற்றுலா விருந்தோம்பல் மற்றும் நிகழ்வுகளில் வியாபார முகாமைத்துவ இளமாணி தொடர்பில் -

(அ) க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் வர்த்தகப் பாடத்துறையில் மூன்று (3) சாதாரண சித்திகளென்ற ('S') அல்லது அதற்குச் சமமான ஆகக்குறைந்த நுழைவுத் தகைமை ஒன்றைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

(ஆ) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியால் அங்கீகரிக்கப்பட்ட இணைக்கும் கற்கைநெறி ஒன்றுடன் க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் ஏதேனும் பாடத்துறையில் மூன்று (3) சாதாரண சித்திகள் ('S') என்பதனை ஆகக்குறைந்த நுழைவுத் தகைமை ஒன்றைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

2. நஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் மனேஜ்மன்ட் லிமிடெட் குறித்துரைக்கப்பட்ட அதிகாரியால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது.

**அட்டவணை II**

| *நிரல் I*<br><br>*பட்டம்* | *நிரல் II*<br><br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| சுற்றுலா, விருந்தோம்பல் மற்றும் நிகழ்வுகளில் வியாபார முகாமைத்துவ இளமாணி | பிபிஎம் (சுற்றுலா, விருந்தோம்பல் மற்றும் நிகழ்வுகள்) |

*03-509/1*

---

*ச. வ. பி. 21/1978* (X) (அ).

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன ஆகிய நான், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், PV 101137 என்ற பதிவிலக்கத்தைக் கொண்டதுமான எஸ். எல். ரி. கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில் சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும் 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதிய 2157/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை, அதற்கான நிரல் I இலும் மற்றும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவிலும் காணப்படுகின்ற "விவசாய தொழில்நுட்பவியலில் சிறப்பு தொழில்நுட்பவியல் இளமாணி" என்னும் பதிவை உடனடுத்து இதற்கான I ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, இதற்கான II ஆம் அட்டவணையின் முறையே நிரல் I இன் கீழும் மற்றும் நிரல் II இன்கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.

கலாநிதி பந்துல குணவர்த்தன,
உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர்.

கொழும்பு,
2020, பெப்புருவரி 24.

## அட்டவணை I

நிபந்தனைகள்

1. எஸ். எல். ரி. கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட், இதற்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பட்டங்கள் தொடர்பில் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது -

(அ) சுற்றுச் சூழல் தொழில்நுட்பவியலில் சிறப்பு தொழில்நுட்பவியல் இளமாணி தொடர்பில், க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் அல்லது தொழில்நுட்பவியல் பாடத்துறையில் அங்கீகரிக்கப்பட்ட பாடங்களில் மூன்று (3) சாதாரண சித்திகளென்ற ('S') அல்லது அதற்குச் சமமான ஆகக்குறைந்த நுழைவுத் தகைமையாகக் கடைப்பிடித்தல் வேண்டும்.

(ஆ) உயிர் முறைமையியல் பொறியியல் சிறப்பு விஞ்ஞான இளமாணி தொடர்பில், க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் உயிரியல் விஞ்ஞான (உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல்) அல்லது பௌதிக விஞ்ஞான (இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல்) பாடத்துறையில் அங்கீகரிக்கப்பட்ட பாடங்களில் மூன்று (3) சாதாரண சித்திகளென்ற ('S') அல்லது அதற்குச் சமமான ஆகக்குறைந்த நுழைவுத் தகைமையாகக் கடைப்பிடித்தல் வேண்டும்.

2. எஸ். எல். ரி. கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் குறித்துரைக்கப்பட்ட அதிகாரியால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டங்களை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது.

## அட்டவணை II

| நிரல் I<br>பட்டங்கள் | நிரல் II<br>பட்டங்களுக்கான சுருக்கீடுகள் |
|---|---|
| சுற்றுச் சூழல் தொழில்நுட்பவியலில் தொழில் நுட்பவியல் இளமாணி சிறப்பு | பிரெக் சிறப்பு (சுற்றுச் சூழல் தொழில்நுட்பவியல்) |
| உயிர் முறைமையியல் பொறியியலில் விஞ்ஞான இளமாணி சிறப்பு | பிஎஸ்சி சிறப்பு (உயிர் முறைமையியல் பொறியியல்) |

*03-509/2*

---

*ச. வ. பி. 21/1978* (X) (அ).

## 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும் PV 62877 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான ஹொரைசன் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னோலொஜி (பிறைவெட்) லிமிட்டெட் தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆந் திகதிய 1975/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையை பின்வருமாறு இக்கட்டளை மூலம் திருத்துகின்றேன்.

1. அக்கட்டளைக்கான (1) ஆம் நிபந்தனையில் "கல்வி இளமாணி" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கல்வி இளமாணி சிறப்பு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

2. அக்கட்டளைக்கான அட்டவணையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய அட்டவணையை இடுவதன் மூலமும் -

கலாநிதி பந்துல குணவர்த்தன,
உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர்.

கொழும்பு,
2020, பெப்புருவரி 24.

**அட்டவணை I**

| நிரல் I<br>பட்டம் | நிரல் II<br>பட்டத்துக்கான சுருக்கீடு |
|---|---|
| கல்வி இளமாணி சிறப்பு | பீஇட சிறப்பு |
| தகவல் தொழில்நுட்பவியலில் விஞ்ஞான இளமாணி/ தகவல் தொழில்நுட்பவியலில் விஞ்ஞான இளமாணி சிறப்பு | பிஎஸ்சி ஐரி/ பிஎஸ்சி சிறப்பு (ஐரி) |

03-509/3

---

ச. வ. பி. 21/1978 (X) (அ).

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், PV 66705 எனும் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான காட்சு (KAATSU) - கய்லி அட்வான்ஸ்ட் மெடிக்கல் டெக்னோலொஜி றெயினிங் சென்ரர் (பிறைவேட்) லிமிட்டெட் (KIU) தொடர்பில், சொல்லப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 9 ஆந் திகதிய 2105/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை, அதற்கான நிரல் I இலும் மற்றும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவிலும் காணப்படுகின்ற “தாதியியலில் விஞ்ஞான முதுமாணி” என்னும் பதிவினை உடனடுத்து இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய, இதற்கான அட்டவணை II இல் முறையே நிரல் I இன் கீழும் மற்றும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.

கலாநிதி பந்துல குணவர்த்தன,
உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர்.

கொழும்பு,
2020, பெப்புருவரி 24.

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. காட்சு (KAATSU) - கய்லி அட்வான்ஸ்ட் மெடிக்கல் டெக்னோலொஜி றெயினிங் சென்ரர் (பிறைவேட்) லிமிட்டெட் (KIU) ஆனது கற்கைநெறி மூலமும் ஆராய்ச்சி ஆக்கக்கூறு (SLOF மட்டம் 10) மூலமும் முகாமைத்துவ மூலோபாய பட்டத்தில் வியாபார

நிருவக முதுமாணி தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டங்கள் தொடர்பில் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது -

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது உயர் கல்வி நிறுவகத்திலிருந்து வியாபார நிருவாகம், பொது நிருவாகம், வர்த்தகம், மனிதவள முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், கணக்கியல், நிதி, தோட்ட முகாமைத்துவம் பெறுமதி மதிப்பீடு, வியாபார பொருளியல், தொழிற்பாட்டு முகாமைத்துவம், முகாமைத்துவ தகவல் முறைமை அல்லது பொருளியல் என்பவற்றில் முப்பது (30) விசேட சித்திகளை உள்ளடக்கிய இளமாணிப் பட்டமொன்றை ஆகக்குறைந்த நுழைவுத் தகைமை ஒன்றாகக் கடைப்பிடித்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) வியாபார நிருவாகம், பொது நிருவாகம், வர்த்தகம், மனிதவள முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், கணக்கியல், நிதி, தோட்ட முகாமைத்துவம் மற்றும் பெறுமதி மதிப்பீடு, வியாபார பொருளியல், தொழிற்பாட்டு முகாமைத்துவம், முகாமைத்துவ தகவல் முறைமை அல்லது பொருளியல் என்பவற்றில் SLQF மட்டம் 6 அல்லது அதற்கு மேலான தகைமை ஒன்றை ஆகக்குறைந்த நுழைவுத் தகைமை ஒன்றாகக் கடைப்பிடித்தல் வேண்டும் ; அல்லது

(இ) SLQF மட்டம் 6 இற்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட உயர் தொழில் தகைமையைக் கடைப்பிடித்தல் வேண்டும் ; அல்லது

(ஈ) அந்த விசேடித்த துறையில் சேர்த்துக்கொள்வதற்காக குறித்துரைக்கப்பட்ட அதிகார சபையால் தீர்மானிக்கக்கூடியவாறான 0-4 அளவுத்திட்டத்தில் 3.0 ஆகக்குறைந்த GPA யினைக் கொண்ட NVQ மட்டம் 7 இனைப் பூர்த்தி செய்வதனை ஆகக்குறைந்த நுழைவுத் தகைமையாகக் கடைப்பிடித்தல் வேண்டும்.

2. காட்சு (KAATSU) - கய்லி அட்வான்ஸ்ட் மெடிக்கல் டெக்னோலொஜி றெயினிங் சென்ரர் (பிறைவேட்) லிமிட்டெட் (KIU) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டங்களை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது.

**அட்டவணை II**

| நிரல் I<br>பட்டம் | நிரல் II<br>பட்டத்துக்கான சுருக்கீடு |
|---|---|
| முகாமைத்துவ மூலோபாயத்தில் வியாபார நிருவாக முதுமாணி | எம்பிஏ (முகாமைத்துவ மூலோபாயம்) |

03-509/4

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.